மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்
முன்னிலை திருமதி.S. முத்துலெட்சுமி, B.A.,M.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்
2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் நாள் திங்கள்கிழமை
அசல் வழக்கு எண்.199/2022
-----

1. அன்னமரியாள் க/பெ.எட்வர்ட், கிறிஸ்தவர், வயது 88, க.எண்.18A ஆசிர்வாதபுரம், நாசரேத் கிராமம், திருச்செந்தூர் தாலுகா.

2. நடராஜன், த/பெ.எட்வர்ட், கிறிஸ்தவர், வயது 53, க.எண்.18A, ஆசிர்வாதபுரம், நாசரேத் கிராமம், திருச்செந்தூர் தாலுகா. ... வாதிகள

/ எதிர் /

1. ஜெயராணி, க/பெ.சேகர், த/பெ. பால், இந்து, வயது 47, ஆசீர்வாதபுரம், நாசரேத் கிராமம், திருச்செந்தூர் தாலுகா.

2. செல்வி, த/பெ.பால், இந்து, வயது 49, ஆசிர்வாதபுரம், நாசரேத் கிராமம், திருச்செந்தூர் தாலுகா. ...பிரதிவாதிகள்

இவ்வழக்கானது தபசில் சொத்தினை வாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ அல்லது ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும் செய்யக் கூடாதென்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கும்படிக்கும் மற்றும் செலவுத் தொகை கேட்டும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கலான நாள் : 29.09.2022

வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் : 29.09.2022

தாவா உண்டாகக் காரணமான நாள் : 25.11.1959, 06.03.1964, 24.10.2004, 25.09.2022 நாசரேத்தில் வைத்து உண்டாகி இருக்கிறது.

ஆள்வரை மதிப்பு : (அ) பரிகாரத்தை ரூ. 1,000/–

நீதிமன்ற முத்திரைக்கட்டணம் : (அ) பரிகாரத்தை ரூ. 30/– தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்கட்டணம் சட்டம் பிரிவு 27(C)ன்படி செலுத்தப்பட்டுள்ளது

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 27.11.2023 தேதியாகிய இன்று விசாரணைக்கு வந்ததில் வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M, ராமேஷ்வரன்., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.துரை.N.சதிஷ்ராஜ்., அவர்கள் ஆஜராகியும், வாதிகள் அழைத்தும் ஆஜரின்றி இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>தீர்ப்பாணை</u>

1. வழக்கை மேல் நடத்ததால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

<u>தபசில்</u>

பாளை ரி.டி., ஆழ்வார்திருநகரி சப்.டி. நாசரேத் பஞ்சாயத்துப்போர்டு லிமிட்டுக்குட்பட்ட நாசரேத் கிராமம், ஆசீர்வாதபுரம் நத்தத்தில் கிழமேல் பாதைக்கும் தெற்கு, மாயாண்டி வீட்டுக்கும் கிழக்கு, சாமுவேல் அயரவர்கள் புஞ்சை நிலத்துக்கும் வடக்கு, ஆசிர்வாதம் கையிருப்பு நிலத்துக்கும் மேற்கு இதற்குள்பட்ட கிழமேல் தச்சுமுழம் 7 தென்வடல் தச்சுமுழம் 33 உள்ள மனையும் அதில் கதவு எண் ஏற்படாத வீடும் உள்பட தபசில் விபரம் சரி. தற்பொழுது 18A ஆசீர்வாதபுரம் தெரு

2023 ம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ம் நாளாகிய இன்று என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

Sd/–திருமதி.S. முத்துலெட்சுமி, B.A.,M.L.,
27.11.2023
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஸ்ரீவைகுண்டம்